பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 10 2024 6 45
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. ஹரியானா மாநிலத்தில் மூன்றாவது முறையாக பிஜேபி-யும், ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணியும் ஆட்சி அமைக்கவுள்ளன.
2. ஹரியானா மக்கள் அளித்துள்ள வெற்றி ஜனநாயகத்துக்கும், அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும் கிடைத்த வெற்றி என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் புதிய வகை இறால் உற்பத்தி முறையை மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் நேற்று வெளியிட்டார்.
4. வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மின்சார பில்லர்களை சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அத்துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி அறிவுறுத்தியுள்ளார்.
5. உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

---- இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

ஹரியானா மாநிலத்தில் பிஜேபி-யும், ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணியும் ஆட்சி அமைக்கவுள்ளன.

இங்கு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

ஹரியானா மாநிலத்தில் மொத்தம் உள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், பிஜேபி 48 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை பெற்றுள்ளது.

காங்கிரஸ் 37 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

பிற கட்சிகள் ஐந்து தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.,

இதன்மூலம் ஹரியானாவில் பிஜேபி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க உள்ளது.

ஜம்மு-கஷ்மீரை பொறுத்தவரை மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணி 49 தொகுதிகளை கைப்பற்றி ஆட்சி அமைக்கவுள்ளது.

பிஜேபி 29 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

மக்கள் ஜனநாயகக் கட்சி மூன்று தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் திரு ஓமர் அப்துல்லா முதலமைச்சராக பதவியேற்பார் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ஃபரூக் அப்துல்லா அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஹரியானா மாநிலத்தில் பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க மக்கள் அளித்துள்ள வெற்றி ஜனநாயகத்துக்கும், அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும் கிடைத்த வெற்றி என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிஜேபி தலைமை அலுவலகத்தில் கட்சி தொண்டர்களிடையே அவர் உரையாற்றினார்.

ஹரியானா மாநில தேர்தல் வெற்றிக்காக உழைத்த அனைத்து தொண்டர்களுக்கும். வாக்களித்த மக்களுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வளர்ச்சி, நல்லாட்சிக்கு மக்கள் மீண்டும் வாக்களித்திருப்பதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

ஜம்மு-கஷ்மீரில் பிஜேபி-க்கு அதிக தொகுதிகளில் வெற்றியை வழங்கியதற்காக அந்த யூனியன் பிரதேச வாக்காளர்களுக்கும் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்தார்.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, பிரதமர் திரு நரேந்திரமோடி மீது நம்பிக்கை வைத்து ஹரியானாவில் மூன்றாவது முறையாக கட்சி வெற்றிபெற்றிருப்பது சாதனை என்று கூறினார்.

ஜம்மு-கஷ்மீரில் பிஜேபி-யின் வாக்கு சதவீதம் அதிகரித்திருப்பதாகக் கூறிய அவர், காங்கிரஸ் கட்சியின் பொய்யான வாக்குறுதிகளை மக்கள் புறக்கணித்து பாடம் கற்பித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஹரியானா தேர்தல் முடிவு எதிர்பாராதது என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த தேர்தலில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு குறித்து காங்கிரஸ் கட்சி ஆய்வு செய்து அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று கூறியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி – காங்கிரஸ் கூட்டணிக்கு வாய்ப்பு அளித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு சேவையாற்ற அளித்துள்ள வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி தங்கள் கூட்டணி அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும், அரசியல் அமைப்பு உரிமைகளை பாதுகாக்க உறுதிபூண்டிருப்பதாகவும் திரு மல்லிகார்ஜூன கார்கே குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

ஹரியானா மாநில தேர்தல் முடிவுகள் தொடர்பான காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திரு ஜெய்ராம் ரமேஷின் புகாரை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

அனைத்து முடிவுகளும் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் தாமதமின்றி ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை பதிவேற்றம் செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிக்கை ஒன்றில் விளக்கம் அளித்துள்ளது.

ஹரியானா மற்றும் ஜம்மு-கஷ்மீர் தேர்தல் முடிவுகள் இணையதளத்தில் தாமதமாக வெளியிடப்படுவதாக திரு ஜெய்ராம் ரமேஷ் நேற்று புகார் அளித்திருந்தார்.

[]<<<>>>[]

செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் உள்ள மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் புதிய வகை இறால் உற்பத்தி முறையை மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் நேற்று வெளியிட்டார்.

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு பேசிய அமைச்சர், நாட்டின் மீன் உற்பத்தி திறன் விரைவாக அதிகரித்து வருவதாகக் கூறினார்.

மீன் உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் எடுத்துரைத்தார்.

மீன் வளத்தை அதிகரிப்பது மட்டுமன்றி, அவை தொடர்பான தொழில்களையும் ஊக்குவித்து மீனவர்களின் வருவாயை பெருக்குவதற்கான திட்டங்கள் அதிக அளவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் மழைநீர் தேங்கும் பகுதிகளில் தாழ்வாக உள்ள மின்சார பில்லர்களை உயர்த்தும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மாநில மின்துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த இரு மண்டலங்களிலும் வடகிழக்கு பருவமழையின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று அதிகாரிகளுடன் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் தேங்கும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் மின்சார தூண்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

மரம் வெட்டும் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்டவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

மின்தடை ஏற்படும் பகுதிகளில் மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக மின் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு செந்தில்பாலாஜி அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மனை தொடர்பான பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு முத்துசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வீட்டு வசதி வாரியத்துக்கு நஷ்டம் ஏற்படாமலும், மனையை வாங்கியவர்கள் பாதிக்கப்படாத வகையிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - முத்துசாமி ) ----40 செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை – நெல்லை வந்தேபாரத் ரயிலில் கூடுதலாக பத்து பெட்டிகளை இணைக்க வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்மூலம் தென் மாவட்ட மக்கள் பயன்பெறுவார்கள் என்பதால் ரயில்வே நிர்வாகம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறினார்.

**[]<<<>>>[]**

லெபனான் மக்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நாடு தழுவிய பிரச்சார இயக்கத்தை தொடங்கி உள்ளது.

**[]<<<>>>[]**

ஹெஸ்புல்லா அமைப்பினர் பலவீனமடைந்து விட்டதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நேபாளத்தில் நேரிட்ட நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட நான்கு புள்ளி இரண்டு டன் நிவாரண பொருட்கள் காத்மண்டு சென்றடைந்தன.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்க ஆகிய நாடுகளின் கடற்படையினர், இந்திய கடற்படையுடன் இணைந்து மேற்கொள்ளும் பயிற்சி விசாகப்பட்டினம் கடற்படைதளத்தில் தொடங்கியுள்ளது.

[]<<<>>>[]

கல்வி நிறுவனங்களில் பேராசிரியர்களின் ஆராய்ச்சிக்கான உதவித்தொகை திட்டத்தை ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

சென்னை மெரி.னா கடற்கரையில் ஒரு கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மக்கள் பயன்பாட்டுக்கு நேற்று திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

தமிழ் வளர்ச்சித்துறையில் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி திட்ட இயக்ககத்தின் வலைதளத்தை மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் நேற்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு கதர்கிராம தொழில் வாரியத்தின் ஆய்வுக்கூட்டம் மாநில அமைச்சர் திரு ராஜகண்ணப்பன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் அஞ்சல்துறை சார்பில் தபால்தலை கண்காட்சி நேற்று தொடங்கியது.

[]<<<>>>[]

சென்னை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து தனியார் பணி புரியும் மகளிர் விடுதிகள் மற்றும் இல்லங்கள் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும் என்று ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணியை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி தில்லியில் இன்று நடைபெறுகிறது.

இரவு ஏழு மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

***End of News***